# பெரம்பலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2017-18 நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண் ந.க.205/கனிமம்/2017, நாள் 23.09.2017-ன்படி பெரம்பலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளைப் பத்திரமானது ஆவண எண் IV49/2017, நாள் 27.9.2017-ன்படி பெரம்பலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | நிர்வாகக் குழு அமைப்பு | வ.எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர் | 1 | மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர் |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர், பெரம்பலூர் | 2 | மாவட்ட வருவாய் அலுவலர், பெரம்பலூர் |
| 3 | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, பெரம்பலூர் | 3 | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, பெரம்பலூர் |
| 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெரம்பலூர் | 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெரம்பலூர் |
| 5 | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், பெரம்பலூர் | 5 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊராட்சிகள்), வளர்ச்சி, பெரம்பலூர். |
| 6 | முதன்மைக் கல்வி அலுவலர், பெரம்பலூர். | 6 | உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சி துறை, பெரம்பலூர் |
| 7 | மாவட்டக் கருவூல அலுவலர், பெரம்பலூர் | 7 | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், பெரம்பலூர் |
| 8 | மாவட்ட சமூக நல அலுவலர், பெரம்லூர் | 8 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழக மாசு கட்டுப்படாட்டு வாரியம், அரியலூர் |
| 9 | உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), பெரம்பலூர் | 9 | மாவட்ட வன அலுவலர், பெரம்பலூர் |
| 10 | முனைவர்.அன்பழகன், 42, 3வது குறுக்கு தெரு, செல்வா நகர், நான்கு ரோடு, துறைமங்கலம் அஞ்சல்,பெரம்பலூர். | 10 | முதன்மை பொறியாளர், நீர் ஆதார அமைப்பு, பொ.ப.துறை, திருச்சி |
| 11 | வருவாய் கோட்டாட்சியர், பெரம்பலூர் | 11 | உதவி இயக்குநர், நில அளவை பதிவேடுகள் துறை, பெரம்பலூர் |
| | | 12 | மாவட்ட கருவூல அலுவலர், பெரம்பலூர் |
| | | 13 | மாவட்ட சமூக நல அலுவலர்,பெரம்பலூர் |

| | | | |
|---|---|---|---|
| | | 14 | துணை இயக்குநர்,(பொது சுகாதார மைய பொறுப்பாளர்) சுகாதார பணிகள், பெரம்பலூர் |
| | | 15 | முதன்மை கல்வி அலுவலர், பெரம்பலூர் |
| | | 16 | இணை இயக்குநர், அரசு சுகாதார துறை, பெரம்பலூர் |

பெரம்பலூர் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, பெரம்பலூர் இந்தியன் வங்கிக் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண்.6569346347) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் முப்பத்தொன்று பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும் 67 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களும் நடப்பிலுள்ளன. நடப்பிலுள்ள முப்பத்தொன்று பெருங்கனிம உரிமங்களில் முப்பது பெருங்கனிம உரிமங்கள் 12.01.2015-க்கு முன்னர் வழங்கப்பட்டவையாதலால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது மற்றும் ஒரு பெருங்கனிம குத்தகை உரிமம் 12.01.2015-க்கு பிறகு வழங்கப்பட்டதால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. மேலும் நடப்பிலுள்ள 67 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களில் 60 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையும், மீதமுள்ள 7 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் 38 கிராம ஊராட்சிகள் சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

பெரம்பலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.3.2018-வரை ரூ.14174271/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தொன்று இலட்சத்து ஏழுபத்தி நான்காயிரத்து இரு நூற்று ஏழுபத்தி ஒன்று மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

தலைவர்,
பெரம்பலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை
மற்றும்
மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர்.

29/6/18